[1973 நவம்பர் 23

Radio Station for Tuticorin

* 330 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state whether the State Government has been consulted by the A.I.R. authorities and the Union Government in regard to the setting up of an All India Radio Station at Tuticorin?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேறு எங்காவது வானொலி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதற்கான சிபார்சு ஏதாவது செய்யப் பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கோவை, திருநெல்வேலி ஆகிய இரு இடங்களிலுமுள்ள இந்த நிலையங்களை முழுமையாகத் தனி நிலையங்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை நாம் மத்திய அரசுக்கு அனுப்பி, அதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதன்னியில், மதுரையில் புதிதாக முழுமையாகத் தனியொரு வானொலி நிலையம் அமைக்க வேண்டும் என்பதையும், அதை ஐந்தாவது திட்டத்தில் இணைக்க வேண்டும் என்பதையும் மத்திய அரசுக்கு நாம் வலியுறுத்தி வருகிறோம். நெல்லையில் இருக்கும் நிலையம் முழுமையான நிலையமாக ஆக்கப்படுமானால் பக்கத்திலே முப்பது, நாற்பது மைலில் உள்ள தூத்துக்குடிக்கு ஒரு வானொலி நிலையம் தேவை இல்லை என்பதும் அரசின் கருத்தாகும்.

திரு. என். கிட்டப்பா: தற்போது சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள வானொலி நிலையங்களின் சக்தியை மேலும் அதிகரிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் ஏதேனும் விடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே இந்த மன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு நான் விளக்கமாகப் பதிலளித்தேன். அந்தச் சக்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது.

1973 நவம்பர் 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தென் பிராந்தியங்களில் உள்ள வானொலிகளில் இந்த ட்ரான்ஸ்மிஷன் சக்தி குறைவாக இருப்பதால், ஒலி சரியாகக் கேட்கவில்லை. ஆகையால், திருநெல்வேலியில் இருப்பதை விஸ்தரிப்பதற்கு உடனடியாக ஏதாவது சிறப்புத் திட்டம் தயாரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் ஏற்கெனவே சொன்னேன். நெல்லை, கோவை ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள வானொலி நிலையங்களை முழுமையான வானொலி நிலையங்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாநில அரசு மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே இருக்கின்ற வானொலி நிலையங்களில் தமிழ் கேட்பதே அரிதாகி விட்டது. ஆகவே, தமிழிசை நிகழ்ச்சிகளும், மற்ற தமிழ் நிகழ்ச்சிகளும் அதிகமாக ஏற்பாடு செய்ய மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே இருக்கின்ற விஷயம் உண்மையாக இருக்குமானால் இந்தக் கேள்வியைக் கொண்டே வானொலி நிலையத்தார் திருத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

College for Siddha System of Medicine at Chingleput

* 331 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether the Palani Andavar Devasthanam has offered Rs. 5 lakhs to run a Siddha College of Medicine at Chingleput; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இதுவரையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, திறமை மிகுந்த, அனுபவம் வாய்ந்த சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் சித்த வைத்தியசாலைகள் வைத்து நடத்தி